# பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 29** **நாள்: 05.03.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் வார்டுகள் மறுவரையறை வரைவு மீது இறுதி முடிவு எடுப்பதற்கு 08.03.2018 அன்று மறுவரையறை ஆணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் நடத்தப்படவுள்ள நேரடி கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு, மனு அளித்த அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் கலந்து கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்**

பெருநகர சென்னை மாநகராட்சி வரைவு மறுவரையறை கருத்துருக்கள் வெளியிடப்பட்டு அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து ஆட்சேபணை / கருத்துக்கள் பெறப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், **18.01.2018** அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் வரைவு மறுவரையறை கருத்துரு வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து **18.01.2018** முதல் **29.01.2018** வரை அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து ஆட்சேபணை / கருத்துக்கள் பெறப்பட்டது.

வார்டு மறுவரையறை தொடர்பாக 18.01.2018 முதல் 29.01.2018 வரை பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணைகள் குறித்து இறுதி முடிவு எடுப்பதற்கு வரும் **08.03.2018** அன்று மறுவரையறை ஆணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் நடத்தப்படவுள்ள நேரடி கருத்துக் கேட்பு கூட்டம் வட்டார ரீதியாக **வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலங்களுக்கு (மண்டலம்–1 முதல் 5 வரை) முற்பகல் 11.00 முதல் 11.45 வரையிலும், மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலங்களுக்கு (மண்டலம்–6 முதல் 10 வரை) முற்பகல் 11.45 முதல் பிற்பகல் 12.30 வரையிலும், மற்றும் தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலங்களுக்கு (மண்டலம்–11 முதல் 15 வரை) பிற்பகல் 12.30 முதல் பிற்பகல் 1.15 வரையிலும் "பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை"** ஆலோசனை கூடத்தில் நடைபெற உள்ளதால் ஏற்கெனவே ஆட்சேபணை/ கருத்துக்கள் தெரிவித்து மனு அளித்த அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**